தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

ஜூலை 2024

மரம் 24 கனி 8

றிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே
கல ஞானத்தோடும்
பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16




ஆசிரியர்
B. அர்ஜூனன்


MONTHLY
THE WORD OF CHRIST

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 55
தலைப்பு : சாயல் - Image
வேத வாசிப்பு : ஆதியாகமம் 1:27



1. தேவன் தம்முடைய சாயலாக - ஆதி.1:27
2. மண்ணானவனுடைய சாயலை - 1கொ.15:49
3. எந்த சாயலை தேவனுக்கு ஒப்பிடுவீர்கள் - ஏசா.40:18


மாத இதழுக்கான சந்தா செலுத்த மூன்று வழிகள்

G-Pay & PhonePe - 9443558041



India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



JOIN OUR
WORLD EVANGELISM
BIBLE SCHOOL
RIGHT NOW



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946
Branch Batlagundu

Contact Us: 6379350509

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்

Our TV Program: Six Days of the Week

*Every Monday, Tuesday & Wednesday 6.00 P.M on Joy TV*
*Every Thursday, Friday & Saturday 6.00 P.M on Heaven TV*

YouTube : the word of christ









**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 24 ஜுலை -2024 கனி - 8


**ஆசிரியருரை**

## எசேக்கியா - Hezekiah



**எ**சேக்கியா யூதாவின் ராஜாவாக இருந்தான். அவனுடைய நாட்களில் ஏசாயா தீர்க்கதரிசியாக இருந்தார். எசேக்கியாவின் நாட்களில் சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத்தோப்பு களைவெட்டி, மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப்போட்டான்; அந்நாட்கள்மட்டும் இஸ்ரவேல்புத்திரர் அதற்குத் தூபங்காட்டி வந்தார்கள்; அதற்கு நிகுஸ்தான் என்று பேரிட்டான். அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை" என 2இரா.18:4,5 வசனங்களில் படிக்கிறோம். இப்படிப்பட்ட இந்த ராஜாவுக்கு ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாக ஒரு மரணச்செய்தி கர்த்தரால் சொல்லி அனுப்பப்பட்டது. பொதுவாக எல்லோருமே நல்ல செய்திகளையே விரும்புவோம். யாருக்கும் துக்கமான செய்தி ஒன்று வந்ததென்றால் மிகவும் வருத்தமாக இருக்கும். எசேக்கியா ராஜா தேவனுடைய பார்வையில் மிகவும் சிறப்பானவனாக ஆட்சிசெய்தான். ஆனாலும் அவன் மரணத்துக்கு ஏதுவானவியாதி கொண்டிருந்தபோது மரணச்செய்தி அனுப்பப்பட்டது. அதுஎன்னவென்றால்; "நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குபடுத்தும், நீர் பிழைக்கமாட்டீர் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்றான் (ஏசா.38:1). இச்செய்தி யாருக்கு வந்தாலும் அது மிகவும் கஷ்டமாகத்தான் இருக்கும். மரிக்கும் தருவாயில் இருக்கும் ஒரு நபரைப்பார்த்து பிழைக்கமாட்டீர் என்று சொன்னால், நான் யாருக்கு என்ன செய்தேன். நான் யாருக்கும் எந்த கெடுதலும் செய்ததில்லை பின்பு ஏன் எனக்கு இந்த மரணம் என்று சொல்லி கலங்குவார்கள்.

எசேக்கியா இந்த வார்த்தைகளை கேட்கவே சுவர்ப்புறமாகத் திரும்பிக்கொண்டு கர்த்தரை நோக்கி: "ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம்பண்ணி, எசேக்கியா மிகவும் அழுதான்" (ஏசா.38:3). இஸ்ரவேலின் தேவன் கண்ணீரைக் காண்கிற தேவன். ஆகையால் அவனுக்கு இரக்கம் செய்தார்.

ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாக; "உன் தகப்பனாகிய தாவீதின் தேவனாயிருக்கிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்; உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, உன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டுவேன். நான் உன்னையும் இந்த

நகரத்தையும் அசீரியா ராஜாவின் கைக்குத்தப்புவித்து, இந்த நகரத்துக்கு ஆதரவாயிருப்பேன். இதோ, ஆகாசுடைய சூரியகடியாரத்தில் பாகைக்குப் பாகை இறங்கின சாயையைப் பத்துப்பாகை பின்னிட்டுத் திருப்புவேன் என்றார். தாம் சொன்ன இந்த வார்த்தையின்படி கர்த்தர் செய்வார் இது கர்த்தரால் உனக்கு அடையாளமாயிருக்கும் என்று சொல் என்றார்; அப்படியே கடியாரத்தில் இறங்கியிருந்த சூரியசாயை பத்துப்பாகை திரும்பிற்று" (ஏசா.38:5-8). பொதுவாக ஜனங்கள் நன்றாக இருந்தால் கர்த்தரைத் தேடுவார்கள். ஏதாவது ஒரு பிரச்சனை வந்துவிட்டால் உடனே தேவனை மறுதலிப்பார்கள் அல்லது பின்மாற்றமாகி போய்விடுவார்கள். இந்த எசேக்கியா ராஜா அந்தவிதமாக செய்யவில்லை. அவன் துக்கச்செய்தி கேட்டு கர்த்தரை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தான். தேவன் ஜீவிக்கிற தேவன். ஜெபத்தைக்கேட்கிற தேவன். அவர் நீதிமானின் ஜெபத்தை கேட்டு அதற்கு நியாயம்செய்வார். கர்த்தர் எசேக்கியாவின் விண்ணப்பத்தையும் அவனுடைய கண்ணீரையும் கண்டு அவனுடைய ஜீவிய நாட்களில் பதினைந்து வருடத்தை கூட்டினார். உங்களுடைய வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் வரலாம். நீங்கள் சோர்ந்துபோகாமல் எசேக்கியாவைப்போல கர்த்தரை நோக்கி அழுது உங்களுடைய காரியத்தைத் தெரியப்படுத்துங்கள். எசேக்கியாவுக்கு இரங்கின கர்த்தர் உங்களுக்கும் இரக்கம் செய்வார்.

தேவனுடைய சமுகத்தில் இரக்கத்தைப்பெற்ற எசேக்கியா, அதை எல்லோரும் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக அதை எழுதிவைத்தான். பின் சந்ததிகள் கர்த்தரின் கிருபையை அறிந்துகொள்ளவேண்டும் என்றும் அவைகளை எழுதிவைத்தான். அது என்னவென்றால்; "நான் என் பூரண ஆயுசின் வருஷங்களுக்குச் சேராமல் பாதாளத்தின் வாசல்களுக்குட்படுவேன் என்று என் நாட்கள் அறுப்புண்கிறபோது சொன்னேன். கர்த்தரை, நான் இனி உயிரோடிருக்கிறவர்களின் தேசத்திலே தரிசிப்பதில்லை; இனி பூலோகக் குடிகளோடே இருந்து மனுஷரை நான் காண்பதில்லை. என் ஆயுசு மேய்ப்பனுடைய கூடாரத்தைப்போல என்னைவிட்டுப் பெயர்ந்துபோகிறது; நெய்கிறவன் பாவை அறுக்கிறதுபோல என் ஜீவனை அறுக்கக் கொடுக்கிறேன்; என்னைப் பாவிலிருந்து அறுத்துவிடுகிறார்; இன்று இரவுக்குள்ளே என்னை முடிவடையப்பண்ணுவீர். விடியற்காலமட்டும் நான் எண்ணமிட்டுக் கொண்டிருந்தேன்; அவர் சிங்கம்போல என் எலும்புகளையெல்லாம் நொறுக்குவார்; இன்று இரவுக்குள்ளே என்னை முடிவடையப்பண்ணுவீர் என்று சொல்லி, நமுட்டைப்போலும், தகைவிலான் குருவியைப்போலும் கூவினேன், புறாவைப்போல் புலம்பினேன்; என் கண்கள் உயரப் பார்க்கிறதினால் பூத்துப்போயின; கர்த்தாவே, ஒடுங்கிப்போகிறேன்; என் காரியத்தை மேற்போட்டுக் கொள்ளும் என்றேன். நான் என்னசொல்லுவேன்? அவர் எனக்கு வாக்கு அருளினார்; அந்தப் பிரகாரமே செய்தார்; என் ஆயுசின் வருஷங்களிலெல்லாம் என் ஆத்துமாவின் கசப்பை நினைத்து நடந்துகொள்ளுவேன். ஆண்டவரே, இவைகளினால் மனுஷர் பிழைக்கிறார்கள்; இவைகளெல்லாம் என் உயிர்க்கு உயிராயிருக்கிறது; என்னைச் சொஸ்தப்படவும் பிழைக்கவும் பண்ணினீர். இதோ, சமாதானத்துக்குப் பதிலாக மகா கசப்பு வந்திருந்தது, தேவரீரோ என் ஆத்துமாவை நேசித்து அழிவின் குழிக்கு விலக்கினீர்; என் பாவங்களையெல்லாம் உமது முதுகுக்குப் பின்னாக எறிந்துவிட்டீர். பாதாளம் உம்மைத் துதியாது, மரணம் உம்மைப்போற்றாது; குழியில் இறங்குகிறவர்கள் உம்முடைய சத்தியத்தை

தியானிப்பதில்லை. நான் இன்று செய்கிறதுபோல, உயிரோடிருக்கிறவன், உயிரோடிருக்கிறவனே, உம்மைத் துதிப்பான், தகப்பன் பிள்ளைகளுக்கு உமது சத்தியத்தை தெரிவிப்பான். கர்த்தர் என்னை இரட்சிக்கவந்தார்; ஆகையால் எங்கள் ஜீவநாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்திலே என் கீதவாத்தியங்களை வாசித்துப் பாடுவோம் என்று எழுதிவைத்தான்" (ஏசா.38:10-20).

வாழ்க்கையில் சோர்ந்துபோய் இருக்கிறவர்களுக்கு எசேக்கியா ராஜாவின் வார்த்தைகள் மருந்தாக அமையும் என்று நான் நம்புகிறேன். இத்தோடு கதை முடிந்துவிட்டது என்று நாம் நினைத்துவிடக்கூடாது. கர்த்தர் ஒருபோதும் கைவிடாத தேவன். அவர் இரக்கம் செய்கிற கர்த்தர். எசேக்கியா ராஜாவின் பாவங்களை தமது முதுகுக்குப்பின்னாக எறிந்துவிட்டார். மனந்திரும்புகிற எப்பேர்பட்ட பாவியாக இருந்தாலும் அவனை மன்னித்து ஏற்றுக்கொள்ளுகிறார். இச்சிறியரில் ஒருவராகிலும் கெட்டுப்போவது பரலோக பிதாவின் சித்தமல்ல; எனவே ஒவ்வொருவரும் மனந்திரும்பவேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார்.

எசேக்கியா ராஜா நம்பிக்கையற்ற சூழ்நிலையில் இருந்தார். இன்று இரவுக்குள்ளே என்னை முடிவடையப்பண்ணுவீர் என்று சொல்லி, நமுட்டைபோலும், தகைவிலான் குருவியைப்போலும் கூவிக் கொண்டிருந்தார். அப்படிப்பட்ட ராஜாவுக்கு கர்த்தர் கிருபையாய் இரங்கி பதினைந்து வருடங்களை அவனுடைய நாட்களில் கூட்டிவழங்கினார். இதற்கு நன்றி கடனாக எசேக்கியா ராஜா செய்த காரியம் என்னவென்றால்; கர்த்தர் என்னை இரட்சிக்கவந்தார்; ஆகையால் எங்கள் ஜீவநாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்திலே என் கீதவாத்தியங்களை வாசித்துப்பாடுவோம் என்று சொன்னான். நம்மை எவ்வளவோ வியாதியிலிருந்தும், வருத்தத்திலிருந்தும் எசேக்கியாவைப்போல கர்த்தர் இரட்சித்திருக்கிறார். நாம் எடுத்த தீர்மானம் என்ன? இவனைப்போல ஜீவநாளெல்லாம் கர்த்தருடைய சமுகத்தை நாடுகிறோமா? என்பதை எண்ணிப்பாருங்கள். எவ்வளவோ நன்மைகளை நாம் பெற்று அத்தனை நன்மைகளையும் மறந்தவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அன்பானவர்களே, நாம் சாட்சியுள்ள மக்களாக கர்த்தரை துதித்துப்பாடுகிறவர்களாக இருக்கவேண்டும். புதிய ஏற்பாட்டில் தேவாலயத்திற்கு முன்பாக பிறந்ததுமுதல் சப்பாணியாக இருந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்த ஒருவன் பேதுரு, யோவானால் தூக்கிவிடப்பட்டபோது அவன் குதித்து எழுந்து கர்த்தரை துதித்துக்கொண்டே தேவாலயத்திற்கு சென்றான் என படிக்கிறோம் (அப்.3:8).

தேவன் அவனுக்கு இரங்கி பேதுருவினால் அவனை சுகமாக்கினார். இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்ட அவன் முதலாவது வீட்டிற்கு போகவில்லை, தன்னுடைய உறவினர்களிடம் செல்லவில்லை, அவன் தன் தேவனுக்கு நன்றி சொல்லும்படியாக தேவாலயத்திற்கு அவர்களோடு சென்றான். அதுவும் தேவனை துதித்துக்கொண்டு சென்றான் என்றுபடிக்கிறோம். அநேகருக்கு துதிப்பது என்றாலே மிகவும் சோர்வாக இருக்கிறது. பாடல் அதிகமாக பாடிவிட்டால் சபையில் முணுமுணுக்க ஆரம்பித்துவிடுவார்கள். தாவீதுடைய வெற்றியின் இரகசியம் அவனுடைய துதிப்பாடல் என்றே சொல்லுவேன். துதிக்கும்போது கர்த்தர் வெற்றியைக் கட்டளையிடுவார். கொஞ்ச காலம் தேவனை தொழுதுவிட்டு பின்பு அவரை அப்படியே மறந்துவிடுவது என்பதல்ல. ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தரை துதிக்கிறவர்களாக இருக்கவேண்டும். எசேக்கியா தன் மரணம் வரை கர்த்தரை பற்றிக்கொண்டு துதிக்கிறவனாயிருந்தான்.

"அத்திப்பழத்து அடையைக் கொண்டுவந்து, பிளவையின்மேல் பற்றுப்போடுங்கள்; அப்பொழுது பிழைப்பார் என்று ஏசாயா சொல்லியிருந்தான்" (ஏசா.38:21). அந்தப்படியாக பிளவையின்மேல் ஏசாயா தீர்க்கதரிசியின் வார்த்தையின்படியே பற்றுப்போட்டார்கள் எசேக்கியா ராஜா பிழைத்தான். கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை மதித்து வந்தான் எசேக்கியா. அவர்களுடைய வார்த்தையை அவன் புறம்பாக்கிப்போடவில்லை. அன்பானவர்களே, கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லும் தேவனுடைய ஊழியர்களை நாம் நேசிக்கும்போது அவர்களாலே நமக்கு நன்மைகள் கிடைக்கும். அவர்கள் தேவனால் ஏற்படுத்தபட்ட அவருடைய வேலையாட்களாயிருக்கிறார்கள். கர்த்தர் அப்படிப்பட்டவர்களோடு அவருடைய வார்த்தையின்மூலமாக பேசிக்கொண்டு வந்தார். இக்கடைசி நாட்களில் தம்முடைய குமாரன் மூலமாக திருவுளம் பற்றியிருக்கிறார்.

ஆகையால் கிறிஸ்துவின் வார்த்தைக்கு நாம் செவி கொடுத்து அவரையும், அவருடைய வசனங்களையும் அறியும்படியாக உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள். அவர்மூலமாக இரட்சிக்கப்படும் வழி புதியஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வழியாக இரட்சிக்கப்படவும் அவ்வழியாக தேவனை தொழுகொள்ளவும், அவ்வழியாக உங்களுடைய ஜீவியத்தை மாற்றிக்கொள்ளவும் கர்த்தருடைய வசனத்திற்குச் செவிகொடுங்கள்.

## கேள்வி நேரம்


**கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயம் எங்கே ஸ்தாபிக்கப் பட்டது?**

ஏசாயா தீர்க்கதரிசி சொல்லியபடி: "கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து; நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப்போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்" என்ற ஏசா.2:2,3 வசனங்களின்படி கர்த்தருடைய சபையானது எருசலேமிலே இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப்பின்பு மூவாயிரம் அங்கத்தினர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. அங்கிருந்து உலகமெங்கிலும் கர்த்தரின் வசனம் வெளிப்பட்டது.

எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள் என்ற வசனத்தின்படி உலகத்தில் உள்ள அனைத்து தரப்பினரும் இயேசுவின் சுவிசேஷத்தினால் பாவமற கழுவப்பட்டு பரிசுத்தவான்களாக தேவனுடைய ராஜ்யமாகிய சபையில் சேர்க்கப்படுகிறார்கள். இயேசுவை தங்களுடைய மேய்ப்பராகவும், இரட்சகராகவும் ஆண்டவராவும் ஏற்றுக்கொண்டு அவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். எங்கும் பிதாவை தொழுதுகொள்ளும் காலம் வரும் என்ற வசனத்தின்படி ஆங்காங்கே கர்த்தரை தங்கள் முழுஇருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் தொழுதுகொண்டு வருகிறார்கள். நீங்களும் இவ்விதமாக தொழுதுகொண்டு இரட்சிக்கப்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

ஜெபியுங்கள்


- இம் மாதம் நமது மாத இதழ் 32 வருடங்களை நிறைவுசெய்கிறது...
- **RNI** புதுப்பித்தலுக்காக நன்றி சொல்லி...
- சென்ற மாதம் கள்ளச்சாராயத்தினால் பலியான குடும்பங்களுக்காக...
- நமது இதழின் வாசகர்களுக்காக...
- நமது மாத இதழ் பிறந்த மாதம் ஆகஸ்டு 1992...



## இரட்சிக்கப்பட ஏன் சிறந்த நீதியுள்ள வாழ்க்கை மட்டும் போதாது

### Why Good Moral Living Alone Is Not Enough To Save

*J.C.Choate*



நீங்கள் இதை உணர்ந்தாலும் உணராவிட்டாலும் அதிகமான ஜனங்கள் இரட்சிக்கப்பட தங்களுடைய சுய நற்கிரியையின் அடிப்படையில் முயற்சிக்கின்றபடியினால் அநேகமாக இழந்து போனவர்களாய் இருப்பார்கள். நித்திய ஜீவனை தேடி இயேசுவினிடம் வந்த ஒரு வாலிபனுடைய சம்பவம் இதை நமக்கு நினைப்பூட்டுகிறது. நாம் வாசிக்கலாம் "அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி; நல்ல போதகரே நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர் நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார். அவன் அவரை நோக்கி எவைகளை என்று கேட்டான். அதற்கு இயேசு கொலை செய்யாதிருப்பாயாக; விபசாரஞ்செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக; உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக; உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்பவைகளையே என்றார். அந்த வாலிபன் அவரை நோக்கி: இவைகளையெல்லாம் என் சிறுவயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன்; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான். அதற்கு இயேசு; நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால் போய் உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார். அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால் இந்த வார்த்தையைக் கேட்டபொழுது துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான். (மத்.19:16-22).

முந்தைய கால சம்பவம் பழைய ஏற்பாட்டு சட்டத்தின் அடிப்படையில் நடந்தவையாகும். வேறொரு வகையில் அச்சமயச் சட்டம் தொடர்ந்து கட்டுப்படுத்திக்கொண்டிருந்தது ஆனபடியால் இயேசு அந்த பழைய சட்டம் கூறுகிறபடி இந்த மனிதனுக்குப் பதிலளித்தார். அவன் நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ள விரும்பினால் அவன் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டுமென பத்துக்கற்பனைகளை அறிந்தவனாக இயேசுவின் விளக்கத்தை கேள்விப்படுகையில் அவன் தன்னுடைய சிறுவயது முதலே அவைகளைக் கைக்கொண்டு வருவதாக பதிலளித்தான். நாம் இதைக் குறித்து சிந்திக்கையில் அந்த கற்பனைகளையெல்லாம் கைக்கொண்டுவருவதினால் அவன் ஒரு சிறந்த நீதியுள்ள மனிதன் அல்லது வேறுவகையில் சிந்திப்போமானால் எந்த வழியிலும் அவன் ஒரு துன்மார்க்கன் அல்லது ஒரு கெட்ட மனிதனல்ல என அறிந்துகொள்ளலாம். இதுவே அவன் பரலோகத்திற்குச் செல்ல போதுமானது என நினைத்தான், எனவே கர்த்தருடைய அனுமதியை மட்டும் பெற்றுக்கொள்ள விரும்பினான் ஆனால் இச்சம்பவத்தில் இது போதுமானதல்ல இயேசுவோ அவனுடைய உள்ளிந்திரியங்களையும், அவனுடைய ஜீவியத்தையும் கண்டுகொண்டவராக அங்கே ஒரு தடையிருப்பதையும் காண்கிறார். இது அவன் ஒரு பணக்காரன் என்பதைக் காட்டுகிறது. எனவே அவன் தன்னுடைய நம்பிக்கையை தன்னுடைய ஐசுவரியத்தின் மேல் வைத்துக்கொண்டிருந்தான். ஆனபடியினால் இயேசு அவனுக்குள்ள எல்லாவற்றையும் விற்று, தரித்திரருக்குக் கொடுக்க வேண்டுமென அவனிடம் சொன்னார்.

அதன்பின் நாம் ஒரு துக்ககரமான கூற்றினைப் பெறுகிறோம். வேதவாக்கியம் கூறுகிறது. அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால் அதைக் கேட்டபொழுது துக்கமடைந்தவனாய் போய்விட்டான். ஒரு சிறந்த நீதியுள்ள வாழ்வு ஒருவனை இரட்சிக்கப் போதுமானதல்ல.

கொர்நேலியு மற்றும் அவனுடைய வீட்டாரைப்பற்றிய சம்பவத்தில் ஒரு சிறந்த மாதிரியை நாம் பெற்றுள்ளோம். கொர்நேலியு என்பவன் ஒரு புறஜாதியான் அவன் பட்டாளத்திலே ஒரு பொறுப்புள்ள பதவியில் இருந்த ஒரு மனிதன்; அதாவது அவன் நூற்றுக்கதிபதியாக இருந்தான். வேதமும் அவனைப் பற்றி இவ்வாறாகக்கூறுகிறது: அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான்'' (அப்.10:2)., இருந்த போதிலும் அவன் ஒரு இழந்துபோன மனிதனாக இருந்தான். கர்த்தருடைய இடைபடுதல் மூலம் கொர்நேலியுவும் அவனுடைய வீட்டாரனைவரும் மற்றும் பேதுருவும் அவனுடைய சகோதரர்களும் அங்கே கூட்டிச் சேர்க்கப்பட்டார்கள். அந்தத் திருப்புமுனையில் பேதுரு அவர்களுக்குப் பிரசங்கித்தான் மேலும் வேதவாக்கியம் சுவிசேஷம் யூதர்களுக்கு அருளப்பட்டதுபோல புறஜாதியாருக்கும் அருளப்பட்டுள்ளது என்பதை யூதர்கள் நம்பத்தக்கதாக இவர்கள் மேலும் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டது என்று கூறுகிறது. ``அப்பொழுது பேதுரு நம்மைப்போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சில நாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்'' (அப்.10:47,48). இப்போது கொர்நேலியு வாழ்ந்து வந்த விதத்தைக் குறித்து குறிப்பெடுப்பீர்களென்றால் இன்றும் கூட எந்த மனிதனும் அவன் ஒரு தேவபக்தியுள்ள மனிதன், தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்தவன், ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்தவன், எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தவன், பார்வைக்கு இனிமையான நல்ல மனிதன் என பலவாறு வகைப்படுத்தப்பட்டிருப்பான் என்பதை நீங்கள் காணலாம். இருந்தபோதிலும் கொர்நேலியு ஒரு இழந்துபோன மனிதனாக இருந்தான். ஆனபடியினால் சுவிசேஷத்தைக் கேள்விப்படுவதும் அதை விசுவாசிப்பதும் அவன் இரட்சிக்கப்படும்படிக்கு அதற்குக் கீழ்ப்படிவதும் அதன்பின் அவன் கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படுவதும் அவனுக்கு அவசியமாயிருந்தது. இதையெல்லாம் செய்வதற்கு அவன் மறுத்தவனாயிருந்தானா? அவன் செய்த எல்லா நற்கிரியைகளை செய்து கொண்டிருந்த போதிலும் அவன் இழந்து போன நிலைமையிலேயே தொடர்ந்திருந்திருப்பான்.

ஒருவன் இரட்சிக்கப்பட்டவனாயிருக்க ஒரு சிறந்த நீதியுள்ள வாழ்வு வாழ வேண்டுமென்பது உண்மைதான். அதன் பொருள் ஒருவன் வெறுமனே கெட்ட மற்றும் தவறான செயல்கள் புரிவதிலிருந்து விலகி இருக்க வேண்டும். இதன் இன்னொரு அர்த்தம் ஒருவன் மாம்சத்தின் கிரியைகளை அல்லது உலகப் பிரகாரமான கிரியைகளைச் செய்யக்கூடாது. கொரிந்து பட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்குப் பவுல், ``அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறிவீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும, சுயபுணர்ச் சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.'' (1கொரி.6:9,10) என்று எழுதினார். அவர்களுடைய உலகப்பிரகாரமான ஐக்கியத்தைக் குறித்து கொரிந்துவிலுள்ள சகோதரருக்குச்

சொல்லுகையில் பவுல் ‘‘விபசாரக்காரரோடே கலந்திருக்கக் கூடாதென்று நிருபத்தில் உங்களுக்கு எழுதினேன் ஆனாலும் இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரர் பொருளாசைக்காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாராதனைக்காரர், இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக்கூடாதென்று நான் எழுதவில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தை விட்டு நீங்கிப் போகவேண்டியதாயிருக்குமே. நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால் சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்கார னாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாரா தனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால் அவனோடே கலந்திருக்கக்கூடாது, அப்படிப்பட்டவனுடனே கூடப் புசிக்கவுங்கூடாது’’ (1கொரி.5:9-11) என்று சொன்னார். இங்கே பவுல் உலகத்தாரோடே எவ்வளவும் பேசி கலந்திராமல் இவ்வாழ்வினை நடத்திச் செல்வது கூடாதகாரியம் என்கிறார். ஆனால் கிறிஸ்துவுக்குள் ஒரு அவிசுவாசமான சகோதரனுக்குள்ளும் ஒரு துன்மார்க்கமான வாழ்வு வாழ்கின்றவனுக்குள்ளும் இக்காரியங்கள் வரும்பொழுது, அப்பேர்பட்ட நபருடன் நாம் ஐக்கியங்கொள்ளக்கூடாது.

பவுல் தொடர்ந்து கலாத்திய சகோதரர்களுக்கு ‘‘மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன; விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள் சண்டைகள், பிரிவினைகள் மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல் இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்’’ (கலா.5:19-21) என்கிறார். பவுல் பல்வேறு வேத பகுதிகளில் ஒருவன் இவ்வகையான பாவச்செயல்களுக்கு இஷ்டப்படி இடமளித்து தேவனுடைய ராஜ்யம் அல்லது கர்த்தருடைய சபையில் பிரவேசிக்க முடியாதென கூறுகின்றார். கிறிஸ்தவர்களோ, கிறிஸ்தவர்களல்லாதவரோ ஒருவன் இப்பேர்பட்ட பாவங்களில் ஈடுபட்டுக்கொண்டே தேவனையும் பிரியப்படுத்த இயலாது. ஒருவன் இப்பேர்பட்ட பாவங்களை செய்கிறதில்லை என்ற அடிப்படையில் மட்டும் இரட்சிக்கப்பட முடியாத வேளையில் ஒருவன் கிறிஸ்தவனாக நிலைத்திருப்பதற்கு அவன் பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகவேண்டுமென்று கிறிஸ்து விரும்புகிறார். (1தெச5:22)

கிறிஸ்தவர்கள் மற்ற சமயத்தினரை விட அதிகமான நீதிக்குரிய சுதந்திரத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என சிலமனிதர்கள் தவறான எண்ணம் கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஒரு கிறிஸ்தவன் புகைபிடிக்கலாம், மதுபானம் அருந்தலாம், ஒழுக்கங்கெட்ட செயல்களில் ஈடுபடலாம் கெட்டவார்த்தை பேசலாம், ஆபாச உடை அணியலாம் இது போன்ற இன்னும் பலவற்றைச் செய்யலாம் என நினைக்கின்றார்கள். வேதாகமம் என்ன போதிக்கிறது, கிறிஸ்தவர்களாக இருப்பதற்குரிய அர்த்தம் என்ன என்பதை அறிந்தவர்கள் நிச்சயமாக இவ்வாறெல்லாம் செய்யக்கூடாது என அறிவார்கள். கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகின்ற சிலர் இவ்வாறான செயல்களிலும் தவறான பழக்க வழக்கங்களிலும் ஈடுபடுவது உண்டு என்பது உண்மை, ஆனால் அவ்வாறு செய்வதினால் அவர்கள் தேவனை துக்கப்படுத்திவருகின்றனர். ஒருவன் இரட்சிக்கப்படவும் ஒருவன் கிறிஸ்தவனாயிருக்கவும், தேவனிடத்திலும் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசம் கொண்டிருந்தால் மட்டும் போதாது அவன் தன்னுடைய சகல பாவங்களுக்காகவும் கண்டிப்பாக மனந்திரும்பி அல்லது அவைகளை விட்டு விலகி அவன் கிறிஸ்துவை தேவனுடைய குமாரரென்று ஏற்றுக் கொண்டு அல்லது அறிக்கையிட்டு கடைசியாக தன்னுடைய பாவங்கள் போகக் கழுவப்பட ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள

வேண்டும். இதை ஒருவன் செய்யும்போது மட்டுமே கர்த்தர் அவனை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்ள மனதுள்ளவராய் இருப்பார். கிறிஸ்தவனாகிய ஒருவன் ஜீவகிரீடத்தை பெறுகிறவனாயிருப்பதால் அவன் மரணம்பரியந்தம் கர்த்தருக்கு உண்மையுள்ளவனாயிருக்க வேண்டும். இவையெல்லாவற்றையும் அதிகமதிகமாய் மறுபடியும் வேதவாக்கியங்களில் வாசிக்கிறோம் (மாற்.16:15,16; அப்.2:38; மத்.10:32; அப்.2:47; வெளி.2:10)

இப்போது ஒருவன் தன்னுடைய சிறந்த ஜீவியத்தின் அடிப்படையில் இரட்சிக்கப்பட்டிருக்கிறான் என ஒரு சிறந்த நீதியுள்ள மனிதனாகவும் விசுவாசமிக்கவனாகவும் இருக்கலாம், ஆனால் துன்மார்க்கத்தோடே இருப்பதினால், அவன் இரட்சிக்கப்பட்டவனாயிருக்க அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படியவேண்டும். அவனுடைய நற்கிரியைகள் மட்டும் அவனை இரட்சிக்காது. ஒருவனுடைய சுய நீதியின் கிரியைகள் அவனை இரட்சிக்காது (எபே.2:8,9; தீத்து3:5). ஒருவன் தன்னை இரட்சித்துக்கொள்ள தன்னுடைய சொந்த நற்கிரியைகளை நம்புகின்றவிஷயத்தில், அவன் அந்த பாவத்திற்காக மனந்திரும்ப வேண்டும். பவுல் நாமெல்லாரும் பாவஞ்செய்திருக்கிறோம் என்கிறார் (ரோம.3:23). ஆனபடியினால் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே கர்த்தர் வந்திருக்கிறார் என வாசிக்கிறோம் (லூக்.19:10). பவுல், கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்றார் (1கொரி.15:1-4). பேதுரு, “ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்” (1பேது.3:18) என்றார்.

என்னுடைய நண்பனே, நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? அப்படியானால், நீங்கள் எவ்வாறு இரட்சிக்கப்பட்டீர்கள்? நீங்கள் சிறந்த நீதிக்குரிய வாழ்க்கைவாழ்வதின் மூலம் பரலோகத்திற்குச் செல்ல முயற்சிக்கிற ஒருவராக இருக்கின்றீர்களா? உங்களுடைய நம்பிக்கையை உங்கள் மேலும் உலக ஆஸ்தியின் மேலும் யாரோ ஒரு மனிதன் மேலும், மனிதனால் உருவாக்கப்பட்ட அமைப்பின் மேலும், அல்லது இவ்வுலகத்தின் வேறு ஏதோ ஒன்றின் மேலும் வைத்துக்கொண்டிருக்கிறீர்களா? பிறகு உங்களுடைய சொந்த உபாயங்களின் மூலம் பரலோகத்திற்குச் செல்ல முயன்று கொண்டிருக்கிறீர்களா? அப்படியானால் உங்களால் இதைச் செய்யமுடியாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம். கிறிஸ்துவினாலன்றி வேறொருவராலும் இரட்சிக்கமுடியாது. நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து, மரணபரியந்தம் பரிசுத்தமாக வாழ்ந்து தேவபக்திக்குரிய ஜீவியத்தைச் செய்யும் போது, அவர் உங்களை இரட்சிப்பதாக மாத்திரமல்ல, பரலோகத்தில் உங்களுக்கு ஒரு வீட்டையும் தருவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். அதைப்பற்றியது தான் வேதமும் கிறிஸ்தவமும்.

நீண்ட காலங்களுக்கு முன் தேவனுடைய தீர்க்கதரிசி ஒரு அடிப்படை உண்மைக் கொள்கையை ஏற்படுத்தினான் அதுவே அன்றும் உண்மையானதாயிருந்தது இன்றும் உண்மையுள்ளதாயிருக்கிறது. அவன், “கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்” (எரே.10:23) என்றான். அதை ஏற்றுக்கொள்ள தாழ்மை அவசியம், ஆனால் ஞானமுள்ளவன் அதை ஏற்றுக்கொள்கிறான்.

மீண்டும், நீங்கள் யாரானாலும், எவ்விதமான ஜீவியத்தைச் செய்கிறவரானாலும், நல்லவரோ அல்லது கெட்டவரோ, நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமானால் தேவனுக்குக் கீழ்ப்படியும்படி உங்களை துரிதப்படுத்த விரும்புகிறேன். நீங்கள் இரட்சிக்கப்பட்டால் மட்டுமே (மாற்.16:16), கிறிஸ்து உங்களை தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார் (அப்.2:47).

# ஆசிரியர் கடந்து வந்த பாதை...




இவ்விதழின் ஆசிரியராகிய நான் 1983-ல் **MZBC** வெளியிட்ட விளம்பரத்தைப் பார்த்து எனது வாலிபவயதில் உலக வேலையை தெரிந்து கொள்ளாமல் வானத்தையும் பூமியையும் உண்டாக்கிய கர்த்தருக்கு ஊழியம் செய்யும்படியாக என் குடும்பத்தார் விதைக்காக வைத்திருந்த விதை நெல்லை ரூபாய் 50/- (ஐம்பதுக்கு) விற்று அந்த பணத்தைவைத்துக் கொண்டு கர்த்தருடைய வசன விதையை விதைக்கும் பணிக்கு பயிற்சி பெற நீலகிரி **Mount Zion Bible College** சென்றேன்.

இதுவே நான் என் குடும்பத்தில் பெற்ற கடைசி பணம். என்னுடைய மூத்த சகோதரனும் இதுவே உனக்கு நாங்கள் கொடுக்கும் கடைசி பணம் என்றான். கண்ணீரோடு வானத்தின் வாசலை வந்தடைந்து அன்பான ஆசிரியர்களால் வேதாகம பயிற்சி பெற்று ஓராண்டு முடிவில் வேதாகம பள்ளி நிர்வாகி சகோ.லெஸ்லி லாரன்ஸ் அவர்களால் காட்டேரி டேம் செல்லும் நீர் வழி தடத்தில் ஞானஸ்நானம் பெற்று சகோ. காரல் ஜான்சன் அவர்களால் 07.07.1976ல் துவங்கப்பட்ட (நீங்கள் பார்க்கிற இந்த சபைகட்டிடம்) அப்போஸ்தலர்2:47ன்படி இங்கு கிறிஸ்துவின் சபையில் அங்கமானேன்.

பின்பு ஓராண்டு பயிற்சிக்குப்பின் பல ஊழியர்களிடம் சென்று பயிற்சிபெற்று 1988-ல் ஆகஸ்டு மாதம் வத்தலக்குண்டில் என்னுடைய வீட்டாரால் துரத்தப்பட்ட நிலையில் ஒரு விதவை கொடுத்த உதவியால் ஒரு வீட்டை ஒத்திபேசி அதில் ஒரு சில ஆத்துமாக்களோடு சபையாக கூடிவந்தோம். அப்பொழுது ஒரு சிறிய நர்சரி பள்ளிவைத்து அதன் வருவாயினாலும், சில ஆண்டுகள் மாதம் 50 ரூபாய் உதவி செய்துகொண்டு வந்த அன்பான ஒரு கர்த்தருடைய ஊழியரின் உதவியினாலும் ஜீவித்துக்கொண்டு வந்தேன்.

என்னுடைய விசுவாசத்தைப் பார்த்தவர்கள் அதே ஊரில் அரசு பள்ளியில் வேலைபார்த்துக்கொண்டிருந்த சகோதரி குளோரி ஆசிரியையை 1992-ல் எனக்கு என்னுடைய பெற்றோருடைய சம்மதத்தோடே திருமணம் செய்து வைத்தனர். அவருடைய பெற்றோர்களும் ஆசிரியர்களே. திருமணத்தில் இணைந்த எங்களுக்கு முதல் ஆசை ஒரு மாத இதழை துவங்கவேண்டும் என்பதே. ஜெபித்து பெயர் வைத்தோம் ‘வேர்ட் ஆப் கிரைஸ்ட்’ என்று, தற்போது அது **`The Word of Christ'** என்று **RNI**-ல் பதிவு பெற்று, இன்று வரை தொய்வின்றி மாதந்தோறும் வெளியிடப்பட்டுவருகிறது. சகோதரர் **J.C.** மற்றும் அவரது துணைவியார் எங்களுடைய ஊழியத்தை அறிந்து, வலது கைகொடுக்க முன்வந்தனர். இன்று வரை அவர்களோடு இணைந்து கர்த்தருடைய பணியை செய்துகொண்டு வருகின் றோம். இலங்கை வானொலியிலும் தொலைக் காட்சியிலும் பலவருடங்களாக கர்த்தருடைய செய்தியை பிரசங்கித்து வந்தோம். கர்த்தருடைய ஊழியத்தில் 40 ஆண்டுகளுக்கு மேலாக பயணித்துக் கொண்டிருக்கும் நாங்கள் **WEBS** ஆரம்பித்து 40க்கும் மேற்பட்ட மாணவர்களை உருவாக்கி இருக்கிறோம். தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி மற்றும் ஆந்திரா மாநிலங்களிலும் கிறிஸ்துவின் வசனமாகிய விதையை குடும்பத்துடன் விதைத்துக் கொண்டு, தற்போது தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளை வெளியிட்டு வருகிறோம். 365 தலைப்பில் கர்த்தருடைய செய்தியை வெளியிட்டுள்ளோம். YouTube மூலமாக நீங்கள் 24 மணிநேரமும் உலகின் எந்த பகுதியிலிருந்தாலும் காணலாம். சபையாரின் உதவியினால் வத்தலக்குண்டு சபைக்காக சொந்தமாக இடம் வாங்கி அங்கே சபையாக கூடிவருகிறோம். எங்களுடைய பணி தொடர ஜெபியுங்கள். எங்களோடு இணைந்து பணியாற்ற விருப்பமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள். **Cell: 6379350509**



ப.ஏ

**வேதாகம கதாபாத்திரங்கள்**
**Bible Characters**

45




## பரிசுத்த வேதாகமத்தில் ஏசாயா
## Isaiah In The Holy Bible

1. ஏசாயா இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகளில் மிகவும் பிரதானமானவன் ஆமோத்தின் குமாரன் - ஏசா1:1
2. சீயோனிலிருந்து வேதமும் எருசலேமிலிருந்து வசனமும் வெளிப்படும் என்றவன் - ஏசா.2:2,3
3. இயேசுவின் பிறப்பு பற்றி தீர்க்கதரிசனம் - ஏசா.7:14
4. வேதத்தை முக்கியப்படுத்தும் ஏசாயா - ஏசா.8:20
5. இயேசுவைப் பற்றிய தீர்க்கதரிசனம் - ஏசா.8:6
6. வேதத்தில் ஒன்றும் ஜோடில்லாதிராது - ஏசா.34:16
7. கர்த்தருடையவன் (இன்று கிறிஸ்தவன்) - ஏசா.44:5
8. அவர் மன்னிக்கிறதற்கு தயை பெருத்திருக்கிறார் - ஏசா.55:8
9. உங்கள் அக்கிரமங்களே மறைக்கிறது - ஏசா.59:1,2
10. இயேசுவானவர் வாசித்த வேதபகுதி இது - ஏசா.61:1

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

**புதிய ஏற்பாட்டு காலத்தில் ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தை வாசித்து பின்பு பிலிப்புவினால் ஞானஸ்நானம் பெற்றவன் யார்?**

**விடை:** எத்தியோப்பிய மந்திரி - " ஊருக்குத் திரும்பிப்போகும்போது, தன் இரதத்திலே உட்கார்ந்து ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக்கொண்டிருந்தான்" (அப்.8:28).



பு.ஏ

**வேதாகம கதாபாத்திரங்கள்**

**Bible Characters**

**46**




## பரிசுத்த வேதாகமத்தில் பிலேமோன்
## Philemon In The Holy Bible


1. பவுலின் உடன்வேலையாள் - பிலே.1
2. இவனுடைய வீட்டிலே சபை கூடினது - பிலே.2
3. உம்முடைய விசுவாசம் பயன்படவேண்டும் - பிலே.4
4. பரிசுத்தவான்களுடைய உள்ளங்கள் இவனாலே இளைப்பாறுதல் அடைந்தது - பிலே.7
5. பவுலின் மன்றாட்டு விண்ணப்பம் - பிலே.9
6. ஓடிப்போன ஒநேசிமுக்காக - பிலே.10
7. என்னை ஏற்றுக்கொண்டதுபோல ஒநேசிமுவை ஏற்றுக்கொள்ளவேண்டும் - பிலே.17
8. ஒநேசிமு கடன்பட்டதுண்டானால் என் கணக்கிலே வைத்துக்கொள்ளும் - பிலே.18
9. பவுல் தன் சொந்தக்கையாலே எழுதிய கடிதம் - பிலே.18
10. இது பிலேமோனுக்கு பவுல் எழுதிய நம்பிக்கை கடிதம் என்று சொல்லலாம் - பிலே.21

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

***ஒநேசிமு உண்மையுள்ளவனா?***

**விடை:** ஆம் - "உங்களிலொருவனாயிருக்கிற உண்மையும் பிரியமுமுள்ள சகோதரனாகிய ஒநேசிமு என்பவனையும், உங்களிடத்தில் அனுப்பியிருக்கிறேன்..." (கொலோ.4:9).





# துவாலையின் பாடம் -1

## Lessons of the Towel

*- Jerry Bates*

**அ)** 1. அநேக சமயங்களில் நாம் அவர் செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிறபடி செய்வதில்லை.

2. அன்பின் நிமித்தமாக நாம் வாழும் வழியை தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தை நமக்கு அவர் அனுமதிக்கிறார். ஒன்று தேவனுக்கு அல்லது நமக்கு நாமே ஊழியம் செய்வது அன்பினால் நாம் அவருக்குச் செவி சாய்த்து பணி செய்யவேண்டுமென்று அவர் விரும்புகிறார். நாம் அப்படிச் செய்யும்படி நம்மை இயங்கச் செய்வதும் அன்பே.

3. யோவா 13-ம் அதிகாரத்தில் மனிதன் சரி என்று நினைக்காத ஒன்றைச் செய்கிறார். அவர் சீடர்களின் கால்களைக் கழுவுகிறார்.

4. கிறிஸ்துவின் வேளை அதாவது அவர் மரிக்கும் நேரம் இப்போது வந்துவிட்டது இன்னும் 24 மணி நேரத்தில் அவர் மரித்துவிடுவார்.

**ஆ)** 1.நாம் தாழ்மையைப்பற்றிய பாடத்தை கற்க வேண்டியிருக்கிறது.

2. இயேசுவானவர் யூதாசும் சேர்ந்து தன் சீடர்களோடு அந்த கடைசி இராவிருந்துண்கிறார்.

**இ)** 1. டாவின்சி வரைந்த மிகவும் பிரசித்தி பெற்ற கடைசி இராவிருந்துண்கிறார் என்ற ஓவியத்தில் சித்தரிக்கப்பட்ட வண்ணம் இயேசுவும் அவருடைய சீடர்களும் அமர்ந்திருக்கவில்லை.

2. அவர்கள் தங்கள் முழங்கைகளை ஊன்றி அநேகமாக பக்கவாட்டில் சாய்ந்திருந்தார்கள்.

3. சில வேளை உணவு வேளையில் எதிர்பாராத ஒன்றை இயேசு செய்தார். அவர் எழுந்து கால்களை கழுவத்தொடங்கினார்.

**ஈ)** 1. அந்தக் காலத்தில் கால்களைக் கழுவுதல் என்பது சமூக நடவடிக்கைகளில் ஒன்றாக இருந்தது. ஒவ்வொருவரும் காலணிகளை அணிந்து கொண்டு பாலஸ்தீன வீதிகளின் பாதைகளில் நடந்து செல்வார்கள். அவர்கள் கால்கள் மிகவும் அசுத்தமாகிவிடும்.

2. விருந்தினரை உபசரிக்கும் ஒரு நல்ல மனிதர் வாசலில் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைத்திருப்பார். ஒருவர் வீட்டிற்குள் வரும் போது அவர் கால்களை ஒருவர் கழுவுவார்.

3. பொதுவாக இதை ஒரு அடிமை செய்வான் ஏனென்றால் இது எல்லாவற்றிலும் மரியாதைக் குறைவாகக் கருதப்பட்ட செயல். ஏன் என்று என்னால் புரிந்து கொள்ள முடிகிறது என்றோ, முடியவில்லை என்றோ கூறினால், விருந்தினர்களின் கால்களைக் கழுவும்படி ஒரு எபிரெய அடிமையை கட்டாயப்படுத்துவதென்பது சர்ச்சைக்குரிய ஒன்றாகிவிடும். புறசாதி அடிமைகள் மட்டுமே விருந்தினர்களின் கால்களைக் கழுவும்படி கட்டளையிடப்பட முடியும். ஒரு அடிமை இல்லாத பட்சத்தில் ஒரு நல்ல விருந்தளிப்பவரே அதைச் செய்வார்.

4. ஏன் அவர்கள் கழுவாத கால்களே ஒரு மேசையைச் சுற்றி அமர வேண்டும் லூக்கா இந்த கடைசி இரா விருந்தைப் பற்றி 22:24-ல் சீடர்கள் நம்மில் யார் பெரியவன் என்று வாதிடுவதை காண்கிறோம். ஒவ்வொருவரும் இந்த தாழ்வான பணியைச் செய்வதற்கு ஒருவரிலும் மற்றவர் பெரியவர் என்று பேசுவதை நாம் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. இப்படியொரு வேலையைச் செய்ய முன்

வந்தால் தன்னைத்தானே தாழ்த்திக்கொள்வதாகிவிடும்.

5. அந்த அறை பெருமையுள்ள இருதயங்கள் மற்றும் அசுத்தமான கால்களால் நிறைந்திருந்தது.

6. இது இப்படியிருந்த வேளையில் இயேசு நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றைச் செய்தார். அவர் யூதாஸ் உட்பட சீடர்களின் கால்களைக் கழுவுகிறார் (13:5) எல்லாரிலும் பெரியவர் முழங்காலில் நின்று பாதங்களைக் கழுவுகிறார்.

7. அவர் இப்படி அவர்களுடைய கால்களைக் கழுவும் போது எல்லா சின்னச் சின்ன பேச்சும் நின்று விட்டதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. விவாதம் உடனே நின்று விடுகிறது. அவர்கள் அவமானமாக வெட்கத்தில் தலை குனிந்து ஒருவரையொருவர் சங்கடத்தில் பார்த்து தலை குனிந்தார்கள். தாமே செய்ய மனமில்லாத எதையும் நாம் செய்ய வேண்டுமென்று சொல்வதில்லை.

**உ)** 1. தாழ்மையை நாம் உதட்டளவில் பேசுகிறோம் ஆனால் நம்மில் அநேகர் தாழ்மையை ஒரு நல்ல பண்பாக விரும்புவதோ, பாராட்டுவதோ கிடையாது.

2. நம்மில் அநேகர் சில சமயம் அவமானப்படுத்தப்பட்டதாக உணர்ந்திருப் போம். நம்மில் யாரும் தாழ்மைப்படுத்தப்படவோ வெட்கப்படுத்தப்படவோ அல்லது சங்கடமான நிலைக்கு தள்ளப்பட விரும்புவதில்லை. ஆனால் கால்களைக் கழுவுவது என்பது தாழ்மைப் படுத்தப்படும் அனுபவமாகும். சிலருக்கு சேவை செய்வது சில வேளைகளில் அவமானமாக இருக்கும்.

3. நம்மில் அநேகர் சேவகன் என அழைக்கப்படுவதை பெரிதுபடுத்துவதில்லை. ஆனால் நாம் சேவகனாக நடத்தப்பட்டு ஒரு பொருட்டாக என்னப்படுவதில்லை ஆனால் சிலுவையிலறையப்பட்ட இரட்சகரை சிலுவையிலறையப்பட்டவர்களே தொர்டபு கொள்ள முடியும்.

4. உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். உலகம் தான் உயர்த்தப்படுவதை (மத்.23:11,12) தேடுகிறது ஆனால் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களோ சேவை செய்ய ஒரு வாய்ப்பைத் தேடுகிறார்கள்.

நாம் எப்படி இந்த மனப்பான்மையை உடையவர்களாயிருக்க முடியும் (13:3).

**ஊ)** 1. இயேசுவானவருக்குத் தெரியும். அவர் பரலோகத்தின் மகிமையையும் பிதாவோடு உள்ள ஐக்கியத்தையும் விட்டு வந்தார். ஆனால் தெரிந்தே அதை விட்டார்.

2. இயேசு யார் என்று அவருக்குத் தெரியும். அவர் தேவனுடைய குமாரன். அவர் மனிதரை பாவத்திலிருந்து இரட்சிக்க வந்த மேசியா.

3. தாம் எங்கே போகிறோம் என்பது இயேசுவானவருக்குத் தெரியும். தாம் சிலுவைக்குப் போகிறோம் என்பதும் உயிர்த்தெழப்போவதும் பின்பு பரலோகத்துக்குப் போவதும் இயேசுவுக்குத் தெரியும்.

4. நமக்கும் அதேனென்று காரியங்கள் கட்டாயம் தெரிய வேண்டும். நாம் பாவ வாழ்க்கையிலிருந்து வந்தோம். இப்போது தேவனுடைய பிள்ளையாயிருக்கிறோம். நித்தியத்தை நாம் தேவனுடனான ஐக்கியத்தில் கழிக்கப் போகிறோம். மிகவும் உறுதியானவர்களே (விசுவாசத்தில்) தாழ்மையாயிருக்க முடியும்.

- தொடர்ச்சி அடுத்த இதழில் வெளிவரும் எதிர்பார்த்து காத்திருங்கள்.

# தேவன் ஏன் மனுஷியை ஏன் உண்டாக்கினார்?

## *Why Did God Make Women?* -Nancy Wheat



**தேவன்** மனுஷியை ஏன் உண்டாக்கினார்? தேவன் எந்த உயிரினங்களையும் நோக்கமில்லாமல் அல்லது காரணமில்லாமல் உண்டாக்கினாரா? நிச்சயமாக இல்லை! நம்முடைய தேவன் ஒரு மாபெரும் சிருஷ்டிகர்; அவர் ஒவ்வொரு சிருஷ்டியையும் ஒரு அற்புதமான நோக்கத்துடன் சிருஷ்டித்திருக்கிறார். ஆகவே, மிக அதிகமாய், மனுஷியானவள் அற்புதமான தெய்வீக நோக்கத்துடன் உருவாக்கப்பட்டாள் இது மனுஷியின் நோக்கம் யாதென நாம் நினைப்பது முக்கியமல்ல. இது எந்தவொரு மனிதனுடைய யோசனை என்னவென்பதும் முக்கியமல்ல. நாம் நிறைவு செய்ய வேண்டிய நோக்கம் தேவனுடைய நோக்கம் என்பதே முக்கியம்.

ஆதியாகமம் இந்த ஆச்சரியமான உலகத்தினை தேவன் சிருஷ்டித்த சம்பவத்தைப் பற்றி கூறுகிறது. ஒவ்வொரு தாவரமும், பறக்கும் பறவையும் மிருகமும் இந்த அற்புதமான சிருஷ்டிப்பில் ஒரு நோக்கத்தைக் கொண்டிருந்தது. மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டதின் நோக்கம் ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்துவதும் காப்பதுமாகும் (ஆதி.2:15). இது காண்பதற்கு ஒரு குடியானவனுடைய வாழ்க்கையை சித்தரிக்கும் செயலாயிருந்தது, ஆனால் தேவனாகிய கர்த்தர், ‘‘........ மனுஷன் தனிமையாயிருப்பது நல்ல தல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்’’ (ஆதி.2:18). பிறகு தேவனாகிய கர்த்தர் இன்னொரு அற்புதத்தை நிகழ்த்தினார்: அவர் ஆதாமுடைய **‘‘ஏற்றதுணை’’** -ஆக மனுஷியை உண்டாக்கினார். தேவனாகிய கர்த்தர் மனுஷியை உண்டாக்கும் வரை மனுஷன் முழுமைபெறவில்லை, சிருஷ்டிப்பு முழுமைபெறவில்லை. அங்கே சிருஷ்டிப்பில் ஒன்றும் மனுஷியைப் போலில்லை. மனுஷியுடைய நோக்கத்தினை வேறு எந்த சிருஷ்டிப்பும் நிறைவு செய்யமுடியாது. ‘‘இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்’’ என ஆதியாகமம்2:23,24 கூறுகிறது. இந்தப் பகுதி தொடர்ந்து, ‘‘இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்’’ எனக் கூறுகிறது. மனுஷி உண்டாக்கப்பட்டதின் நோக்கம் மனுஷனுடைய துணையாக இருப்பதே ஆகும். சமுதாயத்தின் மிக அடிப்படை அமைப்பான குடும்பங்களை உருவாக்கவே மனுஷனையும் மனுஷியையும் தேவனாகிய கர்த்தர் சிருஷ்டித்தார். குடும்பம் அமைதியாக செயல்படுவதில் நாம் ஒருவருக்கொருவர் உதவுகிறவர்களாயிருக்க வேண்டும். எப்படியாகிலும் மனுஷனாகவும் மனுஷியாகவும் நம்முடைய கடமைகள் வித்தியாசமானவை. இயேசு தம்முடைய கிரியையை நிறைவேற்றும் படிக்குப் பூமிக்கு வந்திருக்கையில் தேவன் பரலோகத்தில் வீற்றிருப்பது போல, ஒவ்வொருவரும் வேறுபட்ட கடமையினைக் கொண்டிருக்கிறனர், ஆகவே மனுஷனும் மனுஷியும் குடும்பத்தில் வித்தியாசமான கடமைகளைக் கொண்டுள்ளனர்.

மிருகங்கள் தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கடமைகளை இயற்கை சுபாவத்தின் மூலம் நிறைவேற்றுகின்றன. கற்றுக்கொள்ளக் கூடியவைகளாயிருந்தாலும் அவைகள் நாம் செய்கின்றவைகளே. எபே.5:21-23, மற்றும் 1பேது.3:1-9 போன்ற புத்தகங்கள் மனைவிகள் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கும்படி கூறுகிறது.

கீழ்ப்படிந்திருத்தல் என்பது "அன்புடனே புருஷனுக்குக் கீழ்ப்படிந்திருத்தல்" அல்லது "புருஷனுடைய முடிவெடுத்தலில் உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தல்" என்பதாகும். பெண்களே, பிலிப்பியர்2:5-8ஐ வாசித்து பிறகு இயேசுவில் நீங்கள் கீழ்ப்படிந்து இருக்கிறீர்களா எனத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். கீழ்ப்படிதல் அடிமையா யிருப்பது அல்லது கொடுமையாக நடத்தப்படுவது என பொருள்படாது. இயேசு தம்முடைய பிதாவின் சித்தத்திற்கு அன்புடனே கூடிய கீழ்ப்படிதலோடு ஒப்படைத்தார்.

நாம் நம்மை நம்முடைய புருஷரின் ஆளுகைக்கு ஒப்படைக்கக்கடவோம். ஆம், அநேக புருஷர்கள் கிறிஸ்து சபையில் அன்புகூருகிறது போல தங்களுடைய மனைவிகளிடத்தில் அன்புகூரும் தங்களுடைய கடமையினை நிறைவேற்றுகிறதில்லை, ஆனால் இது நம்முடைய கடமையினின்று நம்மை விடுவிக்கிறதில்லை. இப்படிப்பட்ட புருஷரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு 1பேதுரு 3:1,2, "... பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள்" எனக்கூறுகிறது. "... பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும் ..."தீத்து2:3-5 என ஸ்திரீகளுக்குக் கூறுகிறது. ஏன்? "அப்போது தான் தேவவசனத்தை ஒருவரும் தூஷிக்க மாட்டார்கள்" கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுடைய வசனம் தூஷிக்கப்பட ஒருபோதும் இடமளிக்காமலிருக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். நம்முடைய ஜீவியம் இந்த விருப்பத்தைப் பற்றிக்கொள்ளுகிறதா? தேவன் நம்முடைய குடும்பங்களுக்கென்று கொடுத்த மாதிரியின்படி நாம் ஒருவருக்கொருவர் வாழ்வில் உதவும்படிக்கு புருஷன், மனைவியுமாக நாம் சேர்ந்து ஜெபிக்கக்கடவோம்.

**புருஷர்களே, மனைவியானவள் பலவீனப்பாண்டமாயிருக் கிறபடியினால், நீங்கள் உங்கள் மனைவிகளை அன்புடன் நடத்துவீர்களா னால், உங்களுடைய ஆளுகைக்கு எளிதாகக் கீழ்ப்படிந்திருப்பார்கள்.**

**மனைவிகளே, நீங்கள் சாராள் ஆபிரகாமுக்குக் கீழ்ப்படிந்தது போல நீங்கள் பயபக்தியோடு, அன்புகூர்ந்து உங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்தால், அவர்கள் உங்களிடத்தில் விவேகத்துடன் நடந்து கொள்வது அவர்களுக்கு எளிதாய்க் காணப்படும்.**

சிந்தியுங்கள், நம்முடைய ஜீவியத்தை மேற்கொள்ளும் சாத்தானுடைய வல்லமையோடு போரிடும்படிக்கு நாம் ஒருவருக்கொருவர் உதவிசெய்கின்றவர்களாயிருக் கிறோம். நாம் ஒருவருக்கொருவர் சண்டையிடுகிறவர்களாக மற்றவரை குற்றப்படுத்தி நம்முடையதை நியாயப்படுத்திக் கொள்ளும்போது, சாத்தான் வெற்றி கொள்ளுகிறான். சாத்தான் உங்களுடைய குடும்பத்தைக் கட்டுப்படுத்த இடமளிக்காதிருங்கள்.

- ‘கோமாவில் உள்ள கணவரின் சொத்துக்களை விற்க மனைவிக்கு அனுமதி அளித்து உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- பிரபாஸின் ‘கல்கி 2829 AD’ திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்ட புஜ்ஜி கார் 8 கோடி மதிப்பில் உருவாக்கப்பட்டது.
- இந்தியாவின் விளையாட்டு தலைநகராக தமிழ்நாடு திகழ்வதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

நடப்புச் செய்திகள் நன்றி - NewsPoint

பெண்கள் பகுதி

# நீ சிறியதாயிருந்தாலும்...

## Though You be Little...

*J.GloryArjunan*



இயேசு கிறிஸ்து பெத்லகேம் என்னும் ஒரு சிறிய ஊரில் பிறந்தாரென நாம் அனைவரும் அறிவோம். அந்த பெத்லகேமைப் பார்த்து தான் இந்தத் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது, "எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறிதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது" (மீகா.5:2). மேலும் மத்தேயு2:6-லும் கூட, "யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார் என்று, தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருக்கிறது" என்று வாசிக்கிறோம். அன்பு சகோதரிகளே, இவ்வசனத்திலிருந்து நாம் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ளப்போகிறோம்.

யூதேயாவிலுள்ள ஆயிரம் பட்டணங்களுக்குள்ளே சிறியதாக எண்ணப்பட்டிருந்த பெத்லகேம் என்னப்பட்ட ஊரில் தான் உலகத்தையே இரட்சிக்கவந்தவரும், தன்னைத் தான் தாழ்த்துகிறவர்களை உயர்த்த வந்தவருமான இயேசு கிறிஸ்து மானிடராய் பிறந்தார். இஸ்ரவேலை ஆளுகிறவராய் புறப்பட்டு இன்று வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் படைத்தவராய் உலகத்தையே ஆளுகிறவராய் இருக்கிறார். மிகவும் சிறியதாக எண்ணப்பட்ட அந்த இடத்தில் இயேசு பிறந்தார். இந்த பிறப்பு அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது. அன்பு சகோதரியே நீங்கள் சிறியவராகவும், எல்லாராலும் ஏளனமாகவும் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கலாம், ஆனால் இயேசு உங்களிலே பிறக்கும்படிக்கு இயேசுவுக்கு நீங்கள் வேண்டும். தங்களை அழகுள்ளவர்கள் என்றும், பட்டதாரிகள் என்றும், பட்டணவாசிகள் என்றும், செல்வந்தர் என்றும், சகல ஆசீர்வாதங்களையும் கொண்டிருப்பவர் என்றும், அழகாய் ஜெபிப்பவர், நேர்த்தியாய் தேவவார்த்தைகளை வியாக்கியானம் செய்பவர், அனைத்தும் அறிந்தவர், சிறந்த பேச்சாளர், சாதுரியவான், ஞானி என்றெல்லாம் நினைத்து உங்களை சிறியவர் என்று எண்ணி எள்ளி நகையாடிக்கொண்டிருக்கிற ஆயிரம் ஜனங்கள் மத்தியிலே தேவன் உங்களை நேசிக்கிறார். ஆனபடியினாலே, "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோவா.3:16). தேவன் கொண்ட அன்பினிமித்தமாகவே தம்முடைய ஒரே பேறான குமாரன் இயேசு உலக இரட்சகராக பிறந்து, முன்னணையிலே (Manger) அதாவது கால்நடைகள் தங்கும் இடத்தில் தாழ்மை கோலம் பூண்டவராய் கிடத்தப்பட்டிருந்தார்.

பாவங்களின் மிகுதியால் ஆவி, ஆத்துமா, சரீரம் போன்றவற்றில் அசுத்தமாக அருவருப்பாக துர்நாற்றம் வீசும் ஜீவியத்திலிருந்து நம்மை விடுவித்து பாவமற கழுவி சுத்திகரிக்கும்படி இயேசு பிறந்தார். அன்பு சகோதரியே, இயேசு கிடத்தப்பட்டிருந்த அந்த முன்னணையைக் குறித்து எப்போதாவது சிந்தித்தது உண்டா? இயேசுவின் பிறப்பாகிய இந்த நற்செய்தியை அறிவிக்க ஒருவேளை நீங்கள் அழகிய நறுமணம் வீசும் நாகரீகமான இடத்தையே நாடிச் செல்லுகிறீர்களா, அல்லது அப்பேர்பட்ட இடத்தில் ஊழியஞ்செய்யும் உங்கள் சகோதரிகளைக் குறித்து சிறியவராய் எண்ணுகிறீர்களா? இதை வாசிக்கிற அன்பு சகோதரியே, நீங்கள் அழிந்து போகக்கூடிய இவ்வுலகில் நாகரிகத்தின் உச்சியில் இருந்தால், “இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” (மத்.18:10) என்று கூறும் இயேசுவின் சத்தத்திற்குச் செவிசாயுங்கள் அல்லது சிறுமையாக, எல்லோராலும் ஏளனமாக நடத்தப்பட்டு வேதனையோடே நாட்களைக் கழிப்பீர்களானால், இதோ வேதம் கூறுகிறது, “அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்; அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார்..” (1சாமு.2:8) என்ற வேதவாக்கியம் உங்களைத் தேற்றக்கூடியதாய் இருக்கிறது.

அன்றைய நாளில் அன்னாள் என்ற ஒரு ஸ்திரீ வாழ்ந்து வந்தாள். “கர்த்தர் அவளுடைய கர்ப்பத்தை அடைத்தபடியினால், அவளுடைய சக்களத்தி அவள் துக்கப்படும்படியாக அவளை மிகவும் விசனப்படுத்துவாள்” (1சாமு.1:6) அவள் மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தருடைய சந்நிதியில் தன் இருதயத்தை ஊற்றி ஜெபித்தாள். கர்த்தர் அவளுடைய விண்ணப்பத்திற்கு செவிசாய்த்து அவள் ஒரு குமாரனைப் பெற்றெடுக்க அநுக்கிரகம் பண்ணினார். அவன்தான் கர்த்தருடைய பெரிய வேலையைச் செய்த சாமுவேல் தீர்க்கதரிசி! அன்பு சகோதரியே, நீங்கள் ஏதோ ஒரு சூழ்நிலையில் சிறியவராகவும், ஏளனமாகவும் நடத்தப்பட்டு மிகவும் விசனப்பட்டுக் கொண்டிருக்கலாம். அற்பமாக கருதப்படுகிற உங்களை தேவன் நேசிக்கிறார். பலவீனமாயிருக்கிற உங்களை பலமுள்ளவராகிய தேவன் நேசிக்கிறார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி பலவீனமான உங்களைத் தெரிந்துகொண்டார். ஞானிகளை வெட்கப்படுத்தும்படி ஞானத்தில் குறைவுள்ளவர் களான பைத்தியமானவர்களைப்போல் கருதப்படும் உங்களைத் தேவன் தெரிந்து கொண்டார். “உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவை களையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்” (1கொரி.1:28) என வாசிக்கிறோம். கர்த்தருக்குள்ளான சகோதரிகளே, கர்த்தரை மகிமைப்படுத்துங்கள், கர்த்தரை அறிவியுங்கள்.

சீரியா தேசத்திற்கு ஒரு இஸ்ரவேல் பெண் அடிமையாகக் கொண்டு போகப்பட்டாள். அங்கு நாகமான் என்ற படைத்தலைவன் வீட்டில் வேலைக்காரியாக

பணிவிடை செய்து கொண்டுவந்தாள். அந்த வேலைக்காரியின் மூலம் அந்நாட்டிற்கே இரட்சிப்பு வந்தது. இச்சம்பவத்தினை 2இராஜாக்கள் 5-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். இஸ்ரவேல்தேசத்திலிருந்து சிறைக் கைதியாக பிடித்துக் கொண்டு போகப்பட்ட இந்த சிறுபெண் தன் அடிமைத்தனத்தையோ, சிறையிருப்பையோ எண்ணி தன்னைதானே வேதனைக்குள்ளாக்கிக் கொள்ளவில்லை. தன் எஜமானியின் கீழ் அவள் எவ்வாறு இருந்தாள் என்பது நமக்குத் தெரியாது, ஆனால் அவளோ தன் அடிமைத்தனத்தையும் எண்ணாது கர்த்தருடைய வல்லமையைப் பிரசித்தப்படுத்துகிறாள். சகோதரிகளே, நீங்கள் உங்களுடைய சிறுமையை எண்ணி வருந்தாமல் கர்த்தரை நினைத்து மகிமைப்படுத்துங்கள். கர்த்தராகிய இயேசு தம்முடைய சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலி.2:8), அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவருமாயிருந்தார், அவர் எண்ணப்படாமற்போனார் (ஏசா.53:3). ஆனால் தேவன் அவரை உயர்த்தினார். அவரால் இவ்வுலகிற்கு இரட்சிப்பு வந்தது.

நீங்கள் வசிக்குமிடத்தில், வேலை ஸ்தலத்தில், ஆயிரம் ஜனங்களுக் குள்ளே சிறியவர்களாய் காணப்படலாம். ஆனால் ஆயிரங்களுக்குள்ளே சிறியதாய் காணப்பட்ட பெத்லகேமிலேதான் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமுடையவர் பிறந்தார். அவராலே உலகத்திற்கு பாவத்திலிருந்து விடுதலையும், சமாதானமும் உண்டாயிருக்கிறது. நீங்கள் உங்களுடைய சிறுமையை எண்ணி சோர்ந்து போகாமல் உங்கள் மூலம் இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு அறிவிக்கப்பட உங்களை அவருக்கு அர்ப்பணியுங்கள். அவர் உங்களை உயர்த்துவார். அவர் உங்கள் மூலம் மகிமைப்படுவார்.

## பொது அறிவு சோதனை

1. இந்தியாவின் இன்சூரன்ஸ் எனப்படும் காப்பீட்டுத் துறையை நிர்வகிப்பது யார்?

அ)எல்.ஐ.சி., ஆ)ஐ.ஆர்.டி.ஏ., இ) செபி

2. ஐ.எஸ்.ஐ., என்பது எந்த நாட்டின் உளவு அமைப்பு?

அ)பிரிட்டன் ஆ)பாகிஸ்தான் இ)அமெரிக்கா

3. டியூஸ் என்னும் சொல் எந்த விளையாட்டோடு தொடர்புடையது?

அ)போலோ ஆ) பாக்சிங் இ) லான் டென்னிஸ்


4. சத்யஜித்ரேயுடன் தொடர்புடைய துறை எது?

அ) திரைப்படம் ஆ)விளையாட்டு இ)நாடகம்

5. எந்த மாநிலத்தில் தேர்தல்கள் இல்லாமல் புதிய முதல்வர் பதவியேற்றார்?

அ) கோவா ஆ)ஜார்க்கண்ட் இ)குஜராத்

**விடைகள்: 1.ஆ 2.ஆ 3.இ 4.அ 5.ஆ**



**பொது அறிவு உங்களுக்கு உலக காரியங்களை அறிந்துகொள்ள உதவும்.**

**வேத அறிவு உங்களுக்கு நித்திய ஜீவனை கொடுக்கும்.**

## வேத அறிவுப்போட்டி எண் 284 ன் விடைகள்

1. ஜீவன் - நீதி.4:13
2. யோவான் - 3யோ.14
3. சிந்தனை செய் - பிர.7:14
4. யோவான் - வெளி.1:16
5. மேய்ப்பர் - ஏசா.40:11
6. இரக்கம் - மத்.5:7
7. ஏரேமியா - ஏரே.2:8
8. சொல்லிக்கொண்டார்கள் - மாற்.1:27
9. நீர்க்கால்கள் - புலம் 3:48
10. இயேசு - லூக்.13:12

## வேத அறிவுப்போட்டி எண் 285 ன் விடைகள்

1. எசேக்கியா - எசே.21:30
2. திதிமு - யோவா.21:2
3. நேபுகாத்நேச்சார் - தானி.4:3
4. பவுல், பர்னபா - அப்.13:42
5. ஜீவனுள்ள தேவ.பிள்ளைகள் - ஓசி.1:10
6. கூடாது - ரோ.9:20
7. யோவேல் - யோவே.3:17
8. ஆம் - 1கொ.6:2
9. இஸ்ரவேல் - ஆமோஸ் 3:2
10. தேவன் - 2கொ.5:5

## வேத அறிவுப்போட்டி எண் 284 ல் வெற்றிபெற்றவர்கள்

1.J.மேரிஜெயக்குமார் - மதுரை
(இவர் 283ல் தேர்ச்சி பெற்றவர். கடிதம் தாமதம்)
2.Mrs.ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
3.Sis.ஃபுளோராசுந்தர் - மதுரை
4.Mrs.மேரிநிர்மலா ஆபிரகாம் - மதுரை
(இவர் 283ல் தேர்ச்சி பெற்றவர். கடிதம் தாமதம்)
5.Mrs.பிரமிளாரேவதி - கோவை
6.J.இளவரசிஜோபிதா(WhatsApp)- கோவை
7.D.அன்புக்கமலம் (WhatsApp) - கோவை
8.Mrs.கிறிஸ்டோபல்சாலமோன்- கோவை
9.P.சந்திராடேனியல் - நஞ்சான்குளம்
10.R.அந்தோணியம்மாள்- கலுங்குவிளை
11.Mrs.ஜெனிதர்மராஜ் - திருநெல்வேலி
(இவர் 282ல் தேர்ச்சி பெற்றவர். கடிதம் தாமதம்)
12.Mrs.ரூத்ஜெயராணி - திருநெல்வேலி
13.S.சாந்தகுமாரி - நாசரேத்
14.Mrs.ஜாய்மேத்யு - வி.கே.புரம்
15.R.ஞானசிரோன்மணி - சமயநல்லூர்
16.S.செல்வராஜ் சாலமோன் - திருநெல்வேலி
17.J.S.ஜெயாமேரித்தாய் - திண்டுக்கல்
18.J.பிச்சை - விருதுநகர்
19.Mrs.ஜெயாபாணிஜெபராஜ்- மேற்குதாம்பரம்
20.K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
21.Mrs.பாலின்மார்ட்டின் - காரைக்குடி
22.Mrs.ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
23.S.அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
24.Sis.ஃபிளோராசுந்தர் - மதுரை
25.J.செல்வராஜ் - தூத்துக்குடி
26.A.அன்னாள் ஜெபக்கனி - கோவை
27.Sis.கஸ்தூரி - ஒட்டநத்தம்
28.M.ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
29.Mrs.லலிதாபெவின்சன் - காரைக்குடி
30.E.அதிசயம் - பனைகுடி
31.Mrs.ஃபுளோரன்ஸ்சீத்தர் - சென்னை
32.S.ஜாய்சந்திரகாந்தா - நல்லூர்
33.K.ராணிமூர்த்தி - ஏர்வாடி
34.Mrs.ரூபவல்யா - தூத்துக்குடி
35. Mrs.பாலின்டேனியேல் - சென்னை
36. Mrs.தங்கபுஸ்பம் - நாசரேத்
37. Mrs.ஜெபக்குட்டிமேசஸ் - திருநெல்வேலி
38. Mrs.ஜான்சி - ஆனைமலை

## வேத அறிவுப்போட்டி எண் 285 ல் வெற்றிபெற்றவர்கள்

1. K.ராணி மூர்த்தி - ஏர்வாடி
2.S.செல்வராஜ் சாலமோன் - திருநெல்வேலி
3.Mrs.ஃபுளோரன்ஸ்சீத்தர் - சென்னை
4.A.ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
5.M.ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
6.R.கஸ்தூரி - ஒட்டநத்தம்
7.J.செல்வராஜ் - தூத்துக்குடி
8.Mrs.பியூலா ஜேசுரத்தினம் - பாண்டிச்சேரி
9.Mrs.ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
10.Mrs.ஜெனிதர்மராஜ் - திருநெல்வேலி
11.P.சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
12.S.அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
13.Mrs.ஜாய்மேத்யூ - வி.கே,புரம்
14.Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
15.Mrs.ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
16.Mrs.லலிதாபெவின்சன் - காரைக்குடி
17.D.அன்புக்கமலம் - கோவை
18.Mrs.பாலின்மார்டின் - காரைக்குடி
19.S.சாந்தகுமாரி - நாசரேத்
20.Mrs.ரூபவல்யா - நாசரேத்
21.K.S.மாணிக்கவாசகம் - திருச்சி
22.R.அந்தோணியம்மாள் -கலுங்குவிளை
23.S.ஜாய்சந்திரகாந்தா - நல்லூர்
24.A.அன்னாள் ஜெபக்கனி - கோவை
25.E.அதிசயம் - பனைகுடி
26.Mrs.ஃபிராங்களினாஜான் - ஊட்டி
27.J.பிச்சை - விருதுநகர்
28.J.S.ஜெயா மேரிதாய் - திண்டுக்கல்
29.Mrs.ஜெயாபானிஜெபராஜ் - தாம்பரம்

**"இதோ, தேவன் மகத்துவமுள்ளவர்,**
**அவர் ஒருவரையும் புறக்கணியார்;**
**மன உருக்கத்திலும் அவர் மகத்துவமுள்ளவர்"**
**யோபு 36:5**

சிறுவர் பகுதி

# தங்களைத் தீட்டுப்படுத்தாதபடி பாதுகாத்துக்கொண்ட நான்குபேர்

வேத பகுதி: தானியேல் 1:1–21



நேபுகாத் நேச்சார் என்ற ராஜா இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே ராஜகுலத்தார்களிலும் துரைமக்களிலும் யாதொரு மாசும் இல்லாதவர்களும், அழகானவர்களும், சகல ஞானத்திலும் தேறினவர்களும், அறிவில் சிறந்தவர்களும், கல்வியில் நிபுணரும், ராஜாவின் அரமனையிலே சேவிக்கத் திறமையுள்ளவர்களுமாகிய சில வாலிபரைக் கொண்டுவரவும், அவர்களுக்குக் கல்தேயரின் எழுத்தையும் பாஷையையும் கற்றுக் கொடுக்கவும் ராஜா தன் பிரதானிகளின் தலைவனாகிய அஸ்பேனாசுக்குக் கற்பித்தான். ராஜா, தான் உண்ணும் போஜனத்திலேயும் தான் குடிக்கும் திராட்சரசத்திலேயும் தினம் ஒரு பங்கை அவர்களுக்கு நியமித்து, அவர்களை மூன்றுவருஷம் வளர்க்கவும், அதின் முடிவிலே அவர்கள் ராஜாவுக்கு முன்பாக நிற்கும்படி செய்யவும் கட்டடையிட்டான்.

அவர்களுக்குள்ளே யூதா புத்திரராகிய தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள் இருந்தார்கள். இவர்களுக்கு மற்றொரு பெயர், பெல்தெஷாத்சார், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ. தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம் பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான். தேவன் தானியேலுக்குப் பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படி செய்தார். ஆகையால் தானியேல் பிரதானிகளின் தலைவனை நோக்கி பத்துநாள்வரைக்கும் உமது அடியாரைச் சோதித்துப்பாரும்; எங்களுக்கு புசிக்க பருப்பு முதலான மரக்கறிகளையும், குடிக்கத் தண்ணீரையும் கொடுத்து, எங்கள் முகங்களையும் ராஜபோஜனத்தில் புசிக்கிற வாலிபருடைய முகங்களையும் ஒத்துப்பாரும்; பின்பு நீர் காண்கிறபடி உமது அடியாருக்குச் செய்யும் என்றான். அந்தப்படியே சோதித்துப்பார்த்தபோது இவர்களுடைய சரீரம் புஷ்டியுள்ளதாக இருந்தது. மேலும் ராஜசமூகத்தில் நிற்கும்போது ஞானத்துக்கும் புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக் கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான்.

அன்பான தம்பி தங்கைகளே, நீங்களும் வருங்காலங்களில் இந்த நான்குபேரைப்போல உங்களை தீட்டுப்படுத்தாது பாதுகாத்துக் கொள்வீர்கள் என்றால் உங்களுக்கும் தேவன் ஞானத்தையும் புத்தியையும் தந்தருளுவார்.

**மனப்பாட வசனம்**

**“கர்த்தர் ஞானத்தை தருகிறார்;**
**அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்” நீதிமொழிகள் 2:6.**

## வேத அறிவுப் போட்டி எண்: 287

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. எந்த தீர்க்கதரிசியினுடைய நாட்களில் நீங்கள் மலையின்மேல் ஏறிப்போய், மரங்களை வெட்டிக்கொண்டுவந்து, ஆலயத்தைக் கட்டுங்கள் என்றார்?
2. தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத் தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான் நான் உங்களிடத்திலிருந்தபோது இவைகளைச் சொன்னது உங்களுக்கு ஞாபகமில்லையா என எழுதும் அப்போஸ்தலன் யார்?
3. எவர் எருசலேமின் அகலம் இவ்வளவு என்றும் அதின் நீளம் இவ்வளவு என்றும் அறியும்படி அதை அளக்கிறதற்குப் போகிறேன் என்றார்?
4. ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர் எவர்?
5. எவர்கள் கட்டுவார்கள் நான் இடிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
6. பரிசுத்த வேத எழுத்துக்களை, சிறுவயது முதல் அறிந்தவன் யார்?
7. அந்தச் சிவப்பான கூழிலே நான் சாப்பிடக் கொஞ்சம் தா, இளைத்திருக்கிறேன் என்றான் இதனாலே அவனுக்கு என்ன பேர் உண்டாயிற்று?
8. தன்னை தேவனுடைய ஊழியக்காரனும், இயேசுகிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனுமாகிய என யாருக்கு பவுல் எழுதுகிறான்?
9. எவனுடைய பணிவிடைக்காரனாகிய வாலிபன் ஆசரிப்புக் கூடாரத்தை விட்டுப்பிரியாதிருந்தான்? அவன் பெயர் என்ன?
10. பவுலின் உள்ளம்போலிருந்தவன் ஒநேசிமுவா?

## வேதாகம ஆய்வு... 71

### தாவீது
### David



1. தாவீது பிரீதியானவன்
2. யூதா கோத்திரம், பெத்லகேமியன் – 1நாளா.2:15
3. சாமுவேல் இவனை ராஜாவாக அபிஷேகம் – 1சாமு.16:12
4. தாவீது இஸ்ரவேலை 40 வருஷம் அரசாண்டான் – 1இரா.2:11
5. தாவீதின் நாட்களில் 3 வருஷம் பஞ்சம் – 2சாமு.21:1

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2024-2026
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2024-2026
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
July 2024



பரிசுத்த வேதாகமத்தில்
அப்போஸ்தலர் 10 ம் அதிகாரத்தில்
சொல்லப்பட்ட
கொர்நேலியுவைப்போல
குடும்பமாக இயேசுவை
ஏற்றுக்கொண்டனர்



இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர் கர்த்தருடைய சேனையில் இணைந்தார்

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA



எகிப்தின் நுழைவாயில்

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



